வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 20.5.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 22-ஆம் தேதி **ராஜஸ்தான் மாநிலம் பிகானேரில்**, மொத்தம் 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

நாட்டின் **சுற்றுலாத் துறை வளர்ச்சி** குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

**ஆபரேஷன் சிந்தூர்** நடவடிக்கை தொடர்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் **அனைத்து கட்சிக் குழுக்களை**, மத்திய வெளியுறவுச் செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, இன்று மாலை சந்தித்துப் பேசினார்.

புதுச்சேரியில் **கொரோனா தொற்று** அதிகரித்தால் நிலைமைகளை எதிர்கொள்ள, எல்லா ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளதால், **மக்கள் பீதியடைய தேவையில்லை** என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 22-ஆம் தேதி ராஜஸ்தான் மாநிலம் பிகானேரில், மொத்தம் 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார். ரயில்வே, சாலை, மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட துறைகளை மேலும் வலுப்படுத்துவதில் இத்திட்டங்கள் முக்கிய பங்காற்றுமென அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடி தமது ராஜஸ்தான் பயணத்தின் போது, 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 86 மாவட்டங்களில் அம்ருத் பாரத் நிலையங்களாக மறுமேம்பாடு செய்யப்பட்டுள்ள, 103 ரயில் நிலையங்களையும் திறந்து வைத்து, **பிகானேர்-மும்பை** எக்ஸ்பிரஸ் ரயிலை கொடி அசைத்து தொடக்கி வைக்கிறார். **உதய்பூர்-ஹிம்மத்நகர்** உட்பட மின்மயமாக்கப்பட்ட பல்வேறு ரயில் பாதை பிரிவுகளை

பிரதமர் திறந்து வைத்து, **சூரு-சாதுல்பூர்** இடையே புதிய ரயில் பாதை அமைக்கும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார். அன்றைய தினம் பிரதமர் அடிக்கல் நாட்டும் வேறு பணிகளில், ராஜஸ்தானில் 12 மாநில நெடுஞ்சாலைகளை, 3 ஆயிரத்து 240 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தும் பணிகளும், பிகானேர் மற்றும் உதயபூர் மின் உற்பத்தி திட்டங்களும் அடங்கும். இதுஅல்லாது **பில்வாரா, தோல்பூர்** உள்ளிட்ட இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளையும், பிரதமர் தொடக்கி வைக்கிறார். 2-ஆம் கட்ட அம்ருத் திட்டத்தின் கீழ், பாலி மாவட்டத்தின் 7 நகரங்களில் குடிநீர் விநியோக வசதிகளை மறுசீரமைக்கும் பணிகளும், **ஜுன்ஜுனு** மாவட்டத்தின் கிராமப்புற மக்களுக்கு ஃப்ளுரைட் இல்லாத குடிநீர் வழங்கும் திட்டம் உட்பட பல்வேறு குடிநீர் திட்டங்களும், தொடக்கி வைக்கப்படும், அல்லது, அடிக்கல் நாட்டப்படும். இனி, அம்ருத் பாரத் ரயில் நிலைய திட்டம் குறித்து, ஒரு செய்தி தொகுப்பு............

**(வாய்ஸ்)**

மத்திய அரசின் அம்ருத் பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மொத்தம் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள், பயணிகளுக்கான பல்வேறு நவீன வசதிகள் அடங்கியதாக தரம் உயர்த்தப்பட்டு, பிராந்திய கலை-கலாச்சார அம்சங்களுடன் கூடிய நகர் மையங்களாக மறுமேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இதில் பணிகள் முடிக்கப்பட்டு வரும் 22-ஆம் தேதி பிரதமரால் திறந்து வைக்கப்படும் 103 அம்ருத் பாரத் ரயில் நிலையங்களில் அதிகபட்சமாக 19 ரயில் நிலையங்கள் உத்தரபிரதேஷ் மாநிலத்தில் அமைந்துள்ளன. அதற்கு அடுத்தபடியாக குஜராத் மாநிலத்தின் 18 ரயில் நிலையங்களும் மகாராஷ்டிர மாநிலத்தின் 15 ரயில் நிலையங்களும், புதிய அம்ருத் பாரத் நிலையங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. அம்ருத் பாரத் நிலையங்களில் உருவாக்கப்பட்டுள்ள புதிய வசதிகளில், அகலமான அணுகுச் சாலைகள், சிறந்த வடிவமைப்புடன் கூடிய சுரங்கப் பாதைகள், குறுக்கு பாலங்கள், கம்பீரமான முக மண்டபம், நவீன காத்திருப்புக் கூடம், மின் தூக்கி, மற்றும் கழிவறை வசதிகளும், அடங்கும். இந்த எல்லா வசதிகளும், மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கு ஏற்றதாகவும், அமைக்கப்பட்டுள்ளன. புதிய அம்ருத் பாரத் நிலையங்களில், பயணிகளுக்கான, மேம்பட்ட தகவல் அறிவிப்பு வசதிகளும், **இலவச வை-ஃபை** வசதிகளும் இடம் பெற்றுள்ளன. பணிகள் முடிந்து வரும் 22-ஆம் தேதி பிரதமரால் திறந்து வைக்கப்படும் அம்ருத் பாரத் நிலையங்களில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட மாகே ரயில் நிலையமும், ஒன்றாகும்.

*பரம்வீர் சக்ரா*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், இலங்கையில் இந்திய படையினர் மேற்கொண்ட ஆபரேஷன் பவன் நடவடிக்கையின் போது உயிர் தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது வழங்கப் பெற்ற, மேஜர் ராமஸ்வாமி பரமேஸ்வரன் குறித்து, ஒரு தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

மும்பையில் பிறந்தவரான மேஜர் ராமஸ்வாமி பரமேஸ்வரன், 1972-ஆம் ஆண்டு ஜனவரியில், குறுகிய பணிக்காலத்திற்கான அதிகாரியாக, மஹர் படைப் பிரிவில் சேர்க்கப்பட்டு பின்னர் நிரந்தர அதிகாரியாக மாற்றப்பட்டவர் ஆவார். இந்தியா-இலங்கை உடன்பாட்டின் கீழ் இலங்கையில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்காக, இந்தியாவில் இருந்து பல்வேறு படைப்பிரிவுகள் இலங்கைக்கு அனுப்பப்பட்ட போது, மேஜர் பரமேஸ்வரனின் மஹர் படைப் பிரிவும் இலங்கை சென்று, ஆபரேஷன் பவன் நடவடிக்கையில் பங்கேற்றது. 1987-ஆம் ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி அன்று பின்னிரவில், மேஜர் பரமேஸ்வரன் தமது படைக் குழுவினருடன் தேடுதல் பணிகளை முடித்துக் கொண்டு திரும்பிய வழியில், மறைந்திருந்த தீவிரவாதிகள் திடீரென இந்திய வீரர்களை தாக்க தொடங்கினர். மேஜர் பரமேஸ்வரன் கொஞ்சமும் தாமதியாமல் சமயோஜிதமாக செயல்பட்டு, தீவிரவாதிகளை, பின்னால் இருந்து சுற்றி வளைத்து, தீவிரமாக துப்பாக்கியால் சுடத் தொடங்கினார். இந்த நேருக்கு நேர் சண்டையில் தீவிரவாதியால் சுடப்பட்ட ஒரு குண்டு மேஜர் பரமேஸ்வரனின் மார்பை துளைத்த போதிலும் அவர் கொஞ்சமும் அசராமல் துப்பாக்கியை பறித்து தீவிரவாதியை சுட்டுக் கொன்றார். மோசமாக காயம் அடைந்த நிலையிலும் மேஜர் பரமேஸ்வரன் சற்றும் சளைக்காமல் இறுதி மூச்சு வரை சக வீரர்களை தொடர்ந்து வழி நடத்தி பேரூக்கமாக செயல்பட்டதால் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டு 3 துப்பாக்கிகள் மற்றும் 2 ராக்கெட் லாஞ்சர்களும் கைப்பற்றப்பட்டன. இத்தகைய அபார துணிச்சல் மற்றும் உயிர் தியாகத்திற்காக, அவருக்கு பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. மேஜர் ராமஸ்வாமி பரமேஸ்வரனுக்கு நாடு தலை வணங்குகிறது.

*மோடி-சுற்றுலா*

நாட்டின் சுற்றுலாத் துறை வளர்ச்சி குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர

சிங் ஷெகாவத், இணை அமைச்சர் திரு சுரேஷ் கோபி, மற்றும் மூத்த அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

*மோடி-இரங்கல்*

உதக மண்டலத்தில் இன்று காலமான அணுசக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் எம் ஆர் ஸ்ரீனிவாசன் மறைவு குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இந்தியாவின் அணுசக்தி திட்டங்களில் ஜாம்பவானாக திகழ்ந்தவர் எம் ஆர் ஸ்ரீனிவாசன் என்றும், முக்கிய அணுசக்தி கட்டமைப்புகளை உருவாக்குவதில் அவர் அளித்த பங்களிப்பு காரணமாகவே, எரிசக்தி துறையில் இந்தியாவின் சுயசார்புக்கு அடித்தளம் கிடைத்ததாகவும், சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறி உள்ளார். புனேயில் இன்று காலை காலமான, புகழ்பெற்ற வான் இயற்பியல் விஞ்ஞானி டாக்டர் ஜெயந்த் நார்லிகர் மறைவு குறித்தும் பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் இரங்கல் தெரிவித்துள்ளார்.

*மிஸ்ரி*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றிய இந்தியாவின் பொதுக் கருத்து குறித்தும், தீவிரவாதத்தை அதன் எல்லா வடிவங்களிலும் எதிர்ப்பதற்கான இந்தியாவின் அணுகுமுறை குறித்தும், உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்காக, பல்வேறு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட உள்ள அனைத்து கட்சிக் குழுக்களை, மத்திய வெளியுறவுச் செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, புதுடெல்லியில், இன்று மாலை சந்தித்துப் பேசினார். இதற்கென மொத்தம் 59 எம்பி-க்கள் அடங்கிய 7 அனைத்துக் கட்சி குழுக்கள், மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளன. காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சசிதரூர், பாரதிய ஜனதா எம்பி திரு ரவிசங்கர் பிரசாத், ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஞ்சய் குமார் ஜா, திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி உள்ளிட்டோர், இக்குழுக்களுக்கு தலைமை ஏற்கிறார்கள். இக்குழுவினர் நாளை முதல், அடுத்த மாதம் 5-ஆம் தேதி வரை, ஐ நா பாதுகாப்பு கவுன்சில் உறுப்பு நாடுகள் உட்பட பல்வேறு கூட்டாளி நாடுகளுக்கு பயணிக்க உள்ளனர்.

*ஜோஷி-செயலி*

நாட்டின் வேளாண் கட்டமைப்பு மற்றும் பொது விநியோக முறையை நவீனமாக்கி, டிஜிட்டல் புதுமையாக்கம் மூலமாக உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசு உருவாக்கி உள்ள, 3 புதிய செயலிகளை, மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். வேளாண் துறை மற்றும் பொது விநியோக கட்டமைப்பின் செயல் திறனையும், சேவைத் தரத்தையும் மேம்படுத்த இதனால் ஏதுவாகும் என்று, நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் கூறினார். புதிய **டிப்போ தர்ப்பன்** செயலி மூலம், தானியக் கிடங்குகளின் நடப்பு நிலவரங்களை, அதிகாரிகள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும் என்றும், **அன்ன மித்ரா** செயலி மூலம், நியாய விலைக் கடைகளுக்கான உத்தரவுகளை உடனுக்குடன் பிறப்பிக்கலாம் என்றும், பொது மக்கள் தங்களின் சொந்த மொழியில் புகார்களை பதிவு செய்ய, **அன்ன சகாயதா** செயலி உதவிகரமாக இருக்கும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*புதுச்சேரி-கொரோனா*

புதுச்சேரியில் 12 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ள போதிலும், தொற்று அதிகரித்தால் நிலைமைகளை சமாளிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளதால், பொது மக்கள் பீதியடைய தேவையில்லை என்று சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிசந்திரன் கூறி உள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

டாக்டர் ரவிசந்திரன் மேலும் கூறுகையில் …………

**(வாய்ஸ்)**

*வானிலை*

தென்மேற்கு பருவ மழை, அடுத்த 4-5 நாட்களில் கேரளத்தில் தொடங்கி, தமிழகத்தின் சில பகுதிகளுக்கும் பரவ வாய்ப்புக்கள் உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கர்நாடக கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் வரும் 21-ஆம் தேதி அரபிக் கடலில், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகி, 22-ஆம் தேதி வாக்கில், காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அடுத்த சில நாட்களுக்கு தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய தினம் தேனி, திண்டுக்கல், கோவை,ஈரோடு, தர்மபுரி,கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலத்த சூறாவளி காற்று

வீசுவதற்கான வாய்ப்பு காரணமாக, மீனவர்கள் வரும் 24-ஆம் தேதி வரை, தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளுக்கும், இன்றைய தினம் வட தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மற்றும், ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கும், செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*கிரிக்கெட்*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு டெல்லியில் நடைபெறும் போட்டியில், சென்னை-ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு லக்னோவில் நடைபெற்ற போட்டியில், ஐதராபாத் அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில், லக்னோ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*நிர்மலா*

உலக அளவிலான பல்வேறு புவி-அரசியல், மற்றும், சுற்றுச் சூழல் சவால்களுக்கு இடையில், உள்நாட்டு காரணிகளை நம்பி வளர்ந்து வரும் இந்தியாவில், வர்த்தக சுதந்திரத்திற்கும், சந்தை செயல்பாடுகள் மீதான ஒழுங்குமுறை விதிகளுக்கும் இடையே சரியான சமநிலை அவசியம் என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய போட்டித் திறன் ஆணையத்தின் 16-ஆம் ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர், இந்தியாவின் போட்டித் திறனை வலுப்படுத்தி, இந்திய சந்தையின் உள்ளாற்றலை திறந்து விடவே, டிஜிட்டல் பொது கட்டமைப்பு, பங்கு விலக்கம், சொத்து விற்பனை உட்பட, அமைப்பு ரீதியிலான பல்வேறு சீர்திருத்தங்களை அரசு அமல்படுத்தி வருவதாக கூறினார். சந்தையில் போட்டித் திறனை பராமரித்து, துடிப்பான பொருளாதாரமாக இந்தியாவை வைத்திருப்பதில் இந்திய போட்டித் திறன் ஆணையம் முக்கிய பங்காற்றி வருவதாகவும் நிதியமைச்சர் குறிப்பிட்டார். போட்டித் திறன் ஆணையத்தின் தலைவர் திருமதி ரவுனீத் கவுர் ஆகாஷ்வாணி நிருபரிடம் பேசுகையில் சுதந்திரமான, நியாயமான சந்தை செயல்பாடுகளை உறுதிப்படுத்துவதில், காலத்தின் தேவைக்கேற்ற பல்வேறு நடவடிக்கைகளை ஆணையம் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 22-ஆம் தேதி **ராஜஸ்தான் மாநிலம் பிகானேரில்**, மொத்தம் 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

நாட்டின் **சுற்றுலாத் துறை வளர்ச்சி** குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

**ஆபரேஷன் சிந்தூர்** நடவடிக்கை தொடர்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் **அனைத்து கட்சிக் குழு**க்களை, மத்திய வெளியுறவுச் செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, இன்று மாலை சந்தித்துப் பேசினார்.

புதுச்சேரியில் **கொரோனா தொற்று** அதிகரித்தால் நிலைமைகளை எதிர்கொள்ள, எல்லா ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளதால், **மக்கள் பீதியடைய தேவையில்லை** என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது
Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 20.5.2025/Script/

--------------------------------